# In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.

O.S.No. 1/2024 தேதி-07.04.2026
(PW.1) – ஜெயகிருஷ்ணன்

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி -**

1.வழக்கு B பட்டிகை சொத்தானது கன்னியாகுமரி மாவட்ட காடுகள் பிரிவு G.O.Ms.No.152E and F துறை ஆணை நாள் 16.07.2004 ன் படி வனவிலங்கு சரணாலயமாக அறிவிக்கப்பட்ட பகுதி என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வழக்கு B பட்டிகை சொத்தானது வருவாய் ஆவணங்களில் காடுகள் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. B Memo அடிப்படையில் எவ்வித பரிகாரம் இயலாது என்றால் சரியல்ல. B Memo வழங்கப்பட்ட அரசு நிலத்தில் இருந்து ஆக்கிரமிப்புகளை அகற்றி அரசு கையகப்படுத்தப்பட்ட அரசுக்கு உரிமையுள்ளது என்றால் சரியல்ல.

2.2006 ல் வழக்கு B பட்டிகை சொத்தில் என்னை முறையாக அகற்றிவிட்டார்கள் என்றாலும், தற்போது அரசு தான் கைவசம் வைத்துள்ளது என்றால் சரியல்ல. வழக்கு B பட்டிகை சொத்து என் கைவசம் உள்ளது என்று வழக்கிற்காக நான் பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.மேற்படி சொத்து அரசு பராமரிப்பில் உள்ள வனப்பகுதி என்பதால் எவ்வித உரிமையும் கோரமுடியாது என்றால் சரியல்ல.

3.19.12.2003 ல் வழக்கு B பட்டிகை சொத்தை காலி செய்ய வேண்டும் என்று 5 வது பிரதிவாதி பிரச்சனை செய்தார் என்று நான் சொல்லியுள்ள நிலையில், அதை நிரூபிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்சொன்னவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், அரசு பராமரிப்பின் கீழ் தான் மேற்படி வழக்கு B பட்டிகை சொத்து இருக்கிறது என்றால் சரியல்ல.

4. வழக்கு B பட்டிகை சொத்து சம்மந்தமாக B Memo வின் நகல் ஆவணங்களில் Dr.ராஜமோகன் என்பவரின் கையொப்பமும், சீலும் வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன சீலும், கையொப்பம் எதற்காக

வைக்கப்பட்டுள்ளது என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்சொன்னவாறு கையொப்பமும், சீலும் மேற்சொன்ன நபரிடமிருந்து பெறும் பொழுது அசல் ஆவணங்களை தாக்கல் செய்து கையொப்பம் பெறவில்லை என்றால் சரியல்ல. மேற்சொன்ன ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக ஜோடிக்கப்பட்ட ஆவணங்கள் என்றாலும், நகல் ஆவணங்கள் நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்றால் சரியல்ல.

5. மேற்சொன்ன வா.சா.ஆ.11 ஆவணத்தின் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும். வா.சா.ஆ.10 ஆவணத்தின் நகலை தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு எனக்கு எவ்வித வழக்கு மூலக்காரணமும் இல்லை என்றாலும், வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.